Registered as a Newspaper in Ceylon

★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 246
தேசிய தினசரி

[illegible] புரட்டாதி 28 றஜப் 21 திங்கட்கிழமை (14-10-68)

"போட்"
உதிரிப்பாக
விற்பனையாளர்கள்
ராமகிருஷ்ணாஸ்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7179

நேற்று பிற்பகல் சிறிது நேரம்

# மாவை கோயிலில் பரபரப்பு ஏற்படுத்தியவர் பைத்தியமா?

## கதவைத் தாண்டியவர் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்

### மோட்டார் சைக்கிளுக்கு தீ

(அளவெட்டி நிருபர்)

அளவெட்டி ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இன்று பிற்பகல் எதிர்பாராத விதமாக அசம்பாவிதம் ஒன்று ஏற்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

புத்திசுவாதீனமற்றவராகக் கருதப்படும் ஒருவரால்தான் இப்பரபரப்பு ஏற்படுத்தப்பட்டதென அறியப்படுகிறது.

பிற்பகல் மூன்று மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பூட்டப்பட்ட கதவின் மேலாக ஒருவர் ஏறிப்பாய்ந்து உள்ளே 2-ம் வீதியில் பழனியாண்டவர் வாசலில் உள்ள மணியை அடித்தாராம். மணியை அடித்தபின் "நான் உள்ளே வந்துவிட்டேன் எல்லோரும் வாருங்கோடா" என்று அவர் கூச்சலிட்டதாகவும் அதைத் தொடர்ந்து கோவிலையடுத்துள்ள சிலர் உள்ளேசென்று சம்பந்தப்பட்ட நபரைப்பிடித்துக் கொண்டதாகவும் பின்னர் அவர் நையப்புடைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கோவிலுக்குள் சென்று மணியை அடித்தார் என்று கூறப்படும் இவர் தாக்குதலுக்குள்ளாகி காயங்களுடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பொலிசார் கேட்ட கேள்விகள் எதற்கும் பதிலளிக்கமறுத்துவிட்டாராம். சுயபுத்தியில் அவர் இல்லை எனக்கருதப்படுகிறது.

இந்த நபரும் வேறொருவரும் மாவிட்டபுரம் கோவிலுக்கு வந்த மோட்டார் சைக்கிள் சிலரால் தீவைக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் கேள்விப்பட்ட காங்கேசன்துறை பொலி

8-ம் பக்கம் பார்க்க

## கண்டியில் ரூபா 2 கோடி செலவில் நெசவு நிலையம்

கொழும்பு, ஞாயிறு

2 கோடி 10 லட்சத்து 485 ஆயிரம் ரூபாய் மூலதனத்துடன் கண்டியில் மிகப் பெரிய நெசவு நிலையம் ஒன்றை உருவாக்கப்போகிறது.

பிரிட்டிஷ் கம்பனி ஒன்று கண்டியில் சுமார் 2 கோடி 10 லட்சத்து 435 ஆயிரம் ரூபாசெலவில் பெரியநெசவு ஆலையொன்றை நிறுவுவதற்கு ஆரம்பநடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த நெசவு ஆலை 1970ம் ஆண்டு நடுப்பகுதியில் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்பத்தில் 80 லட்சம் யார் பருத்தித்துணிகளை உற்பத்தி செய்யும் என்று தெரியவருகின்றது.

இந்த நெசவு ஆலையில் புதிய ரக யந்திர சாதனங்கள் இயக்கப்படுமென்று தெரியவருகிறது.

காந்தி நூற்றாண்டுவிழாவுக்கு

## செனட்டர் இரத்தினயக்கா 17ந் திகதி யாழ். வருகிறார்

உருத்திரபுரம், ஞாயிறு

காந்தி நூற்றாண்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவைப்பதற்காக காந்தி நூற்றாண்டு விழா தேசிய சபைத் தலைவர் செனெற்றர் ஏ. இரத்தினயக்கா இம்மாதம் 17-ந்திகதி காலை ஆர். ஏ. எவ். விசேட விமான மூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடைவார்.

அன்றுமாலை 5-30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காந்தி நூற்றாண்டுவிழாவை செனற்றர் திரு ஏ. இரத்தினயக்காவும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்து விசேட உரையாற்றுவார்கள்.

இவ்விழாவில் திரு. எஸ். ஏ. செல்வநாயகம், ஸ்ரீ நரேந்திர யாப், திரு. கு. நேசையா, ஸ்ரீ யாவிதுவீர சிங்க, பண்டிதை சத்தியதேவி-துரைசிங்கம் ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

[8-ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்க காப்டன் பிரேஸிலில் கொலை

பிரேஸிலியா, ஒக். 15

பிரேஸிலில், ஸவ்ந் பாலோ என்னுமிடத்தில், அமெரிக்க காப்டன் ஒருவரை இரண்டு பேர் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

காப்டன் காரில் சென்றுகொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அவரது காரில் இந்த இருநபர்களாலும் விட்டுச்செல்லப்பட்டிருந்த துண்டுப் பிரசுரமொன்றில், இறந்த காப்டன் பிரேஸிலிலுள்ள எதிர்ப்புரட்சியின் ஒரு கையாள் என வர்ணிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இறந்த அமெரிக்க காப்டன் ஸவ்ந் பாலோ பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தவராவர்.

இது இவ்வாறிருக்க பிரேஸில் பொலிசார், கிராமப்புறத்திலுள்ள ஒரு கமத்தில் சட்ட ரீதியாக விலக்கப்பட்டுள்ள தேசிய மாணவர் சங்க மகாநாடொன்றில் கலந்துகொண்டிருந்த 12,000 மாணவர்களைக் கைது செய்தனர்.

## 'விவசாயிகளும் கடமைகளை செய்யவேண்டும்'

பருத்தித்துறை, ஞாயிறு

"விவசாயத்துறையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொள்கைகளை நோக்குமிடத்து, நாம் மிகக்குறுகிய காலத்தில் எமது உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதுடன், பிற நாடுகளுக்கும் உணவு ஏற்றுமதி செய்யவேண்டும் என்பது தெரிகிறது. ஆகவே விவசாயிகளும் தமது கடமைகளை உணர்ந்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்காவிடில் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படாது."

இவ்வாறு விவசாயப்பகுதி உத்தியோகத்தர் திரு. எம். நாராயணமூர்த்தி தென்மேற்படி மந்திகையிலுள்ள சித்திரா-அரசியல் மன்றக் கட்டடத்தில் உரைநிகழ்த்தும் போது குறிப்பிட்டார். திரு. ஏ. இரத்தினசபாபதி தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய திரு. நாராயணமூர்த்தி [illegible] உத்தரவாத விலைத்திட்டம், மானியவிலைப் பசளை விநியோகம் ஆகியன விவசாயிகளுக்கு சிறந்த நன்மைகளைக் கொடுப்பதாகவும் அவற்றைப் பயன்படுத்த வேண்டியது விவசாயிகளின் கடமை [illegible] திரு. [illegible] நன்றி கூறினார்.

## மேலதிகவாடகை அறவிடுவது ஒத்திவைக்கப்படும்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் குடிசைகளுக்கு மேலதிகமாக வாடகைப் பணம் அறவிடுவது நிறுத்திவைக்கப்படும் என்று தெரிகிறது. மேலதிகவாடகைப் பணம்அறவிடுவதை அடுத்துவரும் மாநகரசபை நிர்வாகம் முற்றாக ஆராயும் வரை நிறுத்திவைக்கும்படி மாநகரசபை ஆணையாளருக்கு தேசியமாக சேவைகள் அமைச்சர் உத்தரவிட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

[illegible] தேசிய [illegible] சேவைகள் அமைச்சருக்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எழுதியிருந்ததற்கு திரு. சுகததாஸா பதிலனுப்பியிருக்கிறார். அந்த பதிலில் மேலதிக வாடகை அறவிடுவதை நிறுத்திவைக்கும்படி ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்தக்கடிதத்துக்கு திரு. பொன்னம்பலம் நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில், இந்தவிஷயத்தில் வாடகை மூலம் வீடு வாங்கும் திட்டத்தை அமுல் நடத்துவதுபற்றி ஆலோசிக்குமாறு கேட்டிருப்பதாகத் தெரிகிறது. [தே. நி.]

## யாழ்ப்பாணத்தில் குன்றக்குடி அடிகளார்

உருத்திரபுரம், ஞாயிறு

இலங்கை வந்திருக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் வடஇலங்கையில் கலந்துகொள்ளும் பிரதான நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

வருகிற 16-ம் திகதி திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டு அன்றுமாலை கிளிநொச்சி பிரதேச கலாமன்றத்தை ஆரம்பித்துவைப்பார். 17-ம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி, 10-30 மணி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பி. பகல் 3 மணி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மாலை 5-30 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காந்தி நூற்றாண்டு விழாவை

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில்

# போதிய ஊழியர் இல்லாக்கஷ்டம்

## தொழிலாளர் சங்கத்தலைவர் கவலை

புலோலி, சனி

இலங்கையின் ஜனத்தொகை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் நேரத்தில் யாழ் குடா நாட்டில் இருக்கும் வைத்தியசாலைகளில் போதிய அளவு ஊழியர்கள் இல்லாக்குறை இருந்து வருகின்றது.

கடந்தவாரங்களில் நாங்கள் சில வைத்தியசாலைகளில் சென்று பார்த்த பொழுது அங்கு கடமை புரியும் தொழிலாளர்களின் துன்புறுவதைக் காண நேர்ந்தது என்று தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத் தலைவர், திரு. மா. தேவராசா பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பல் சிகிச்சை மண்டபத்தில் நடாத்திய பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் வைத்தியசாலையில் கடமைபுரியும் சகல ஊழியர்களும் வைத்திய அதிகாரிகளுடனும் நோயாளர்களுடன் ஒற்றுமையாக நடந்து வரவேண்டும் நோயாளர்களாலும் லஞ்சம் வாங்குவதைத் தடுத்து நல்ல முறையில் நடக்க முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

சங்கப் பொதுக் காரியதரிசி திரு. மா. ஐயன்ணு சங்க பிரசாரக் காரியதரிசி திரு. மு.வ சுப்பிரமணியம் கூட்ட முடிவில் தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத் தலைவருக்கு மந்திகைவைத்திய சாலையில் கடமைபுரியும் ஊழியர்கள் ஓர் சுற்றறிக்கை சமர்ப்பித்தார்கள்.

இவர்கள் கேட்டிருக்கும் 6 அம்ச கோரிக்கைகளுக்கு சங்கத்தலைவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மந்திகை வைத்தியசாலை சங்க ஸ்தாபன தலைவராக திரு. எஸ் வி, சுப்பிரமணியம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக திரு. ரி. குமாரசாமி காரியதரிசி திரு. செல்லத்தம்பி உபகாரியதரிசி திரு. எம். கமலாசினி நிர்வாக சபை உறுப்பினராக 5பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. திரு. சந்தையா செல்வி வல்லிபுரம் அன்னமேரி லூர்தம்மா அருளம்பலம்

---

ஆசிரியருக்குக் கடிதம்

## கியூவில குழப்பம்

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் கோப்பாய் செல்வதற்கான கியூவில் நிற்கும் பிரயாணிகள் கடந்த இரு மாத காலமாக புதிய அனுபவமொன்றைப் பெற்று வருகிறார்கள்.

பஸ்நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பிரயாணிகள் தரிப்புநிலையத்தில் சேப்பாய் பிரயாணிகளுக்கென இருக்கும் நிலையத்தில் வரிசைக் கிரமமாகச் செல்லுவதற்கு துணைசெய்து வந்த இரும்புச் சட்டங்கள் இருமாதமாகக் காணாது போய் விட்டதால் இப்பகுதிப் பிரயாணிகள் வீண் நெரிசல்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறது. அத்துடன் தைரியம் கூடியவர்கள் முன்னுக்கு நெளிந்து செல்லவும் தைரியம் குறைந்தவர்கள் பின்னுக்குத் தள்ளப்படவும் இது வழிசெய்து விடுகிறது.

இதுபற்றி பஸ்நிலையத்தில் அதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டபோது கிடைத்த பதில் ‘ஏன் நீங்களே திருத்திக்கொள்வது தானே?’ இந்த பகுதி பஸ் தரிப்பு நிலைய கியூ சீராக இயங்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

- கோப்பாய் பிரயாணி.



வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் திருப்பணி நிதிக்காக இம்மாதம் 19-ம் திகதி யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் செல்வி வாணி முத்துக்குமாரசாமியின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் ஒரு காட்சி

இம்மென்னு முன்னே எழுநூறு பாடல்கள் இயற்றிய கவிஞர்கள் முற்காலத்தில் இருந்தார்கள் என்று படித்திருக்கிறோம். கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்தப் புளுகு புலவர்களின் சாமர்த்தியத்தை சற்றே அளவுக்கு மிஞ்சி மிகைப்படுத்தி கற்பனையைக்கொஞ்சம் அதிகமாக நீட்டிவிட்டசரடு என்று ஒரு காலத்தில் நினைத்தேன்.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ளச உடம்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கவிஞரைச் சந்தித்த பின்பு அது வெறும் ஆகாசப் புளுகல்ல அதில் கொஞ்சமாவது உண்மை இருக்கத்தான் வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பூம்புகாரில் ஒருநாள் என்ற தலைப்பில் காவியக் கற்பனைச் சித்திரம் வரைந்து அதற்காக தங்கப்பதக்கம் பெற்று ஈழநாட்டிற்கு பெருமை படைத்தந்த கவிஞர் சி. நாகராஜனை அன்றொருநாள் சந்தித்தபோது தாம் பார்த்த ‘சிறுவர் பாடல்’ என்ற கவிதை நூலை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். அதை திறந்து பார்த்துவிட்டுதனவு செய்து இதில் தங்கள் கையொப்பத்தையும் இட்டுத் தாருங்கள் என்றுகூறிக் கொண்டிருக்க ஒரு தும்மல் வந்தது.

நான் மறுபக்கம் திரும்பி ‘இம்’ என்று ஒரு தும்மல் தும்மிவிட்டுத் திரும்பினேன் கவிஞர் மறுபடியும் தமது நூலை என்னிடம் நீட்டினர் வெறும் கையொப்பம் மட்டும் போட்டிருக்கிறாரக்கு மென்று நினைத்துக்கொண்டு புத்தகத்தை திறந்தேன்.

அங்கே முதல் ஒற்றையில் ஒரு கவிதை மிளிர்ந்தது.

0 0 0

### நாட்டிலும் நகரிலும்

என்னிடம் பலர் கவிதை எழுதும்படி வற்புறுத்தினர்கள் எனக்கே சிலசமயம் ‘நான் அங்கே போனேன் நீயும் அங்கே வந்தாய், நான் உன்னைக் கண்டேன் நீயும் என்னைக்கண்டாய் என்று இனிமாம்பாணியில் எழுதியாவது என்கவிதை ஒன்றை அச்சு ரூபத்தில் காணவேண்டுமென்று ஒரு சபலக் கனவு முனையில் உதிர்ததுண்டு. அதிஷ்டவசமாக அது நிறைவேறவில்லை.

‘ஊமைமைக்கள் ஊரில் உளறுவாயன் சமர்த்தன்’ என் நல்லவேளை எனக்கு கிடைக்கப்படா தென்பதற்காக எழுதிய அரைகுறை கவிதைகளை கிழித்தெறிந்து விட்டு அந்த ஆசைக்கு ஒரு பெரிய குடமுழுக்கு போட்டு விட்டேன்.

நான் இப்படியிருக்கும் போது நாகராஜன் மட்டும் எப்படி இம்மென்று தும்மும் முன்பே கவிதைகளை இறக்கித் தள்ளுகிறாரென்று எனக்கு உள்ளூர ஆசை ஒருபக்கம் பெருமை ஒருபக்கம்.

0 0 0

ஆதிகாலத்து ஒளவையார் காலத்தொட்டு அதிவீர ராமபாண்டியன் முதல் சோமசுந்தரப் புலவர் ஈருகவுள்ள கவிஞர்கள் எல்லோரும் இறைவர் சமுதாயத்தை உய்விப்பதற்கு வேண்டி நன்நெறிகளையும் நல்வழிகளையும் எளிய சிறிய இனிய கவிதைகள் மூலம் இயற்றி ஊட்டி வந்திருக்கிறார்கள், அவை பாடத் தித்திக்கும், படிக்க இனிக்கும், செவிக்கு இன்பம் தந்த சிந்தனையைத் தூண்டும்.

இவர்களுடைய வழிமையைப் பின்பற்றி கவிஞர் நாகராஜனும் இயற்கை விலங்கினம் பறவையினம், நல்லொழுக்கம் முதலிய பகுதரப்பட்ட தலைப்புகளில் ஒவ்வொருவருதிகாரத்தின் கீழும் நான்குவரிகள் கொண்ட ஐவ்வைந்து சிறிய பாடல்களை இயற்றியுள்ளார். பாலர்கள் பாடுவதற்கு எளிமையும் இனிமையும் உள்ளவை. மனப்பாடம் செய்து சொல்வதற்கு சுலபமானவை.

ஓசை நயம் கருத்துநயம் சொல்நயம் முதலிய சகல நயங்களும் பொருந்திய இப்பாடல் தொகுதி பள்ளிக்கூடங்களில் மட்டும் இருக்க வேண்டியது அவசியமானதல்ல, பெற்றோர்கள் வீடுகளில் வைத்தும் குழந்தைகளுக்கு அவற்றைச் சொல்லித்தரலாம்.

‘வாலை ஆட்டி வளைந்து பின்னே
வந்து மோந்து நிற்கும்
காலை நக்கிக் கனிவு காட்டிக்
கடிக்கும் கொஞ்சத் தாவும் நாயையும்’

‘பாலைக்குடிக்கப் பதுங்கும்
பார்த்து விட்டால் ஒதுங்கும்
கோலைக் கண்டால் ஓடும்
குதித்து அப்பால் சாடும்,
பூனையைப் பற்றி பாடிக்கொண்டு நிற்க எந்த, இதுவனுக்குத்தான் பிடிமிராது.

தமிழே மூச்சாக, கவிதையே துடிப்பாகஎழுந்தே பின்ப்பாக வாழும் கவிஞர் நாகராஜன் ஓர் ஈழத்துப் பாரதிதாசனென திகழவேண்டும். எல்லோரும் அவருக்கு ஊக்கத்தை அளிப்பார்களாக.

— வழிப்போக்கன்

# நயினாதீவு பிரயாணிகள் சபை

நயினாதீவு, ஞாயிறு

‘தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், பிரயாணம் செய்யும் யாத்திரிகர்களினதும், பொதுமக்களினதும், நல்லுரிமைகளை பெறுவதற்கும், சிறந்த பிரயாண வசதிகளை ஏற்படுத்துவதற்கும், அரசாங்க உதவிகளைப் பெறுவதற்கும் பிரயாணிகள் சபையினால் உதவ முடியும்’

நயினாதீவு பிரயாணிகள் சபையை அங்குராப்பணம் செய்து வைத்த திரு. இ. இ. பூபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு: தலைவர்: திரு. இ. இ. பூபாலசிங்கம், உப-தலைவர்: திரு. ச இ. கனகசபை செயலாளர்: திரு. கே. வ. பொன்னம்பலம், உப-செயலாளர்: திரு. மு. முத்தையா பொருளாளர்: திரு. மு. சண்முகராசா.

---

## ஆசிரியர் காப்பாற்றினர்

இளவாலை, ஞாயிறு

பஸ்ஸிலிருந்து தவறி விழவிருந்த ஒரு சிறுவன் தக்க தருணத்தில் ஆசிரியரொருவரால் காப்பாற்றப்பட்ட சம்பவம் உடுப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்ற பஸ் ஒன்றில் வீரபத்திரர் கோவிலடியில் ஏறிய சுமார் ஆறு வயதுச் சிறுவன் சிறிது தூரம் சென்றதும் தவறி மிதிபலகையில் விழுந்தான். இதைக்கண்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆசிரியரான திரு ... சமயத்தில் அம்மாணவனைப் பிடித்து இழுத்துக் காப்பாற்றினர்.

## ஒதுக்கீடு

கொழும்பு, ஞாயிறு

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்காக அரசாங்கம் மேலும் 12.4 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## பனாமாக் குடியரசில் இராணுவச் சதிப்புரட்சி

பனாமா, ஒக். 13

தென் அமெரிக்காவையும் மத்திய அமெரிக்காவையும் இணைக்கும் தென் அமெரிக்கக் குடியரசான பனாமாவின் அதன் ஜனாதிபதி திரு. ஆரியாஸ், இராணுவச் சதிப்புரட்சி ஒன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர் நாடு முழுவதும் இரவு நேர ஊரடங்குச் சட்டமொன்றைப் பிறப்பித்துள்ளனர்.

புதிய அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் நாட்டு மக்களை அமைதியாக இருக்கும்படியும், எதிர்ப்பு ஏதுமின்றிப்புரட்சி நடந்தேறியதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் வேறு செய்திகள் நாட்டில் மோதல்கள் இருந்ததாகவும் தலைநகரில் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றதாகவும் தெரிவித்துள்ளன.

இரகசிய ரேடியோ ஒன்று மக்களைத் தெருக்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்காவில், அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க், பனாமாப் புரட்சி பற்றி அமெரிக்கா ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## சாய்ப்புச் சட்டம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை பட்டினப்பகுதியில் சாய்ப்புச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. அ.பிறட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நீரில் மூழ்கி மரணம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

நாரந்தனையைச் சேர்ந்த தம்பாட்டி வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம்-மனோகரன் என்ற ஒன்பதுவயது சிறுவன் அப்பகுதியிலுள்ள குளத்தில் நீராடியபோது எதிர்பாராதவிதமாய் நீரில் மூழ்கி மரணமானான்.

---

இரு மாணவருக்கு

## மேற்படிப்புக்கு நிதி உதவி


உடுவில், சனி

பல்கலைக்கழகப் படிப்பு உதவிநிதியை சுந்தரம் சண்முகநாதன், ஐயாத்துரை செல்வராசா ஆகிய இருவரும் பெற்றுள்ளனர்.

சுன்னாகம் பட்டினசபை வழங்க இருக்கும் சுன்னாகம் பட்டினசபை எல்லைக்குட்பட்ட ஏழைப் பிள்ளைகளின் பல்கலைக்கழகப் படிப்பு உதவிநிதித் திட்டத்தின்கீழ் மேற்கண்ட இரு மாணவர்களும் தலா 500 ரூபாவை உதவிநிதியாகப் பெற்றுள்ளனர்.

சினிமா விமர்சனம்

# பெண் என்றால் பெண்



தாய் வாழவேண்டுமென்பதற்காக மகள் தனது காதலைத் துறந்து இறுதியில் தன் உயிரையே அர்ப்பணிக்கும் ஒருபெண் டாக்டரின் இலட்சியத்தை சித்தரிக்கிறதுபெண் என்றால் பெண்.

விஜயகுமாரிக்குப்பொருத்தமான பாகம். காதலில் தோல்வியை தியாகத்தை முன்வைத்து ஏற்றுக் கொள்ளும்போது அவரது நடிப்பில் அனுபவ முதிர்ச்சி தெரிகிறது. தமிழ் வசனங்களை அவர் உச்சரிக்கும் போது ஒரு தனிச்சுவை இருக்கத்தான் செய்கிறது.

சரோஜாதேவி காதல் காட்சிகளில் இளம் ரசிகர்களுக்கு நல்ல விருந்தளிக்கிறார்.

ஜெமினி முதலில் காதலில் தோல்வியடைந்து பிறகு வேறொருத்திக்கு மணஆறுதல் அளிப்பதற்காக காதலிக்கிறார். அப்பாவியாக வரும் அவர் காதல் காட்சிகளில் மிகக் கைதேர்ந்தவராக இப்படத்திலும் நடித்திருக்கிறார்.

அசோகன் சோகப்பாத்திரம் ஏற்றுவந்தாலும் நன்கு சோபிக்கிறார்.

தங்கவேலு. சோ, வைத்தியநாதன் வந்து சிரிப்பூட்டுகிறார்கள். தமக்குரிய பாவங்களுக்குத் தாமே கட்டுக்கள் போட்டுக்கொள்வது நல்ல சிரிப்பூட்டும் கட்டம்.

எஸ்டேட்பாய், வீ. கே. ராமசாமி ஏற்ற பாத்திரத்தை சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

தியாகத்தின் பெருமையை நன்குணர்த்தி பொழுது போக்குடன் நல்ல போதனை வையும் தரும் பெண்என்றால் பெண் இப்பொழுது யாழ்ப்பாணம் ராணியில் ஓடிக்கொண்டிருக்கிறது.

—கணேஷ்

## நால்வரும் விடுதலை
### வழக்கு மீண்டும் தாக்கலாகலாம்

குருமணலிட்டி, வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் சட்ட விரோத கூட்டம் கூடி பயங்கர ஆயுதம் வைத்திருந்து கலகம் விளைவித்தது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட நான்கு நபர்களை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் விடுதலைசெய்தார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கே. முருகேசு, என். அப்புக்குட்டி, தெல்லிப்பழை வாசியான வீ. சாந்தலிங்கம், மல்லாகத்தைச் சேர்ந்த கே. தர்மலிங்கம் ஆகிய நால்வரும் வைப்பில் ஈடுபட்டதாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹோர்மேதிவல நான்கு நபர்கள் மீதும் தற்போது பொலிசார் வழக்குத்தொடரவில்லை எனத் தெரிவித்ததையடுத்து எதிரிகளை மாஜிஸ்திரேட் விடுதலை செய்தார். உயர்தர அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் எனவும் இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் ரி. தம்பிரத்தினம் ஆஜரானார்.

## சோலைவரி கட்டாதவர்கள்:
### சுழிபுரம் கி.ச. இறுதிஎச்சரிக்கை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமச் சபையினர் தமக்கு சேரவேண்டிய சோலை வரியைக் கட்டாதவர்கள்மேல் நடவடிக்கை எடுப்பதாக இறுதி அறிவித்தல் கொடுத்துள்ளனர். இம்மாதப் பிற்பகுதியில் 14-ம் 15 ம் 16ம் வட்டாரங்களிலுள்ள வரிகட்டாதவர்கள் மேல் அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்யவும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவும் ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. படிப்படியாக எல்லா வட்டாரங்களிலும் பணம் கட்டாதவர்களுடைய வீடுகளில் சென்று பணம் அறவிட வேண்டிய ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மாங்காய்த் துரத்துகையில் விழுந்தாராம்

யாழ்ப்பாணம், திங்.

பசுமாட்டைப் பிடிப்பதற்கு ஓடிச்சென்ற 78வயது வயோதிகர் தவறுதலாக விழுந்து பெருங்காயங்களுக்குள்ளானார் சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ். சம்பந்தமூர்த்தி என்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு எலும்பு முறிந்திருக்கலாமென டாக்டர்கள் சந்தேகிக்கின்றனர். [ந. நி.]

## 'உருகிக்கண்ணீர் விடுவதால இறைவன் அருளைப்பெறலாம்'

சுழிபுரம், சனி

உலகிலே செல்வர்களிலும் வறியவர்கள் பலராகவும் வாழ்கின்றனர். செல்வர்கள் அதிக பணத்தைச் செலவு செய்து அபிஷேக ஆராதனைகளும் குடம் குடமாக பால் தயிர் மற்றும் திரவியங்களையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர். ஏழைகளாகிய நாம் இறைவன் நாமத்தை உச்சரிப்பதின் மூலமும் அவன் புகழ்படுவதன்மூலமும் அவனைத் துதித்து வணங்குகின்றோம். இறைவனைத் துதிப்பவர்கள் மனம் உருகி கண்ணீர் விடுவதால் அருளைப் பெறலாமென்பதை வாழ்ந்துகாட்டிய பெரியார்கள் வழிகாட்டியுள்ளனர் இவற்றுக்கு எல்லாம் அரும் பெரும் தொண்டாகஇளையோர்களை எல்லாம் நல்ல கருத்துக்களை கற்கவும் அறியவும் ஒழுங்கான வாழ்வுவாழவும் வழிவகுக்க வேண்டும். அவற்றை நல்ல நூல்களே செய்ய முடியும்.

இவ்வாறு வழக்கம்பரை சன்சமூக நிலைய மஜனைச் சபையினர் வெளியிடுசெய்துள்ள தேவியைத் தொழுவோம் என்னும் நூலைவெளியீடு செய்து உரையாற்றிய ஆசிரியர் திரு. மு இருஷ்ணபிள்ளை குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. க. வாமதேவன் தலைமை வகித்தார். திரு. கிருஷ்ணபிள்ளை தொடர்ந்துமேலும் பேசுகையில் தேவியின்பாடல்களைப் பாடுவதால் நாம் எண்ணிய காரியங்கள் எல்லாவற்றையும் அடையலாம் அபிராமிப்பட்டர் அவ்வாறே தேவியின் உதவியைப் பெற்றார் என்பதை அவர் சரிதை மூலம் அறிகிறோம். வாழ்வுக்கு வேண்டியது ஒழுக்கம் ஒன்றே அவற்றை நல்ல நூல்களே தரும். மற்றும் பலர் பேசினர்.

---

### தேவாலயத்தில் திருட்டு

வண்டத்தரிப்பு, ஞாயிறு

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் கோவில் உண்டியல் உடைத்து திருட்டு நடைபெற்றுள்ளது. தங்கச் சங்கிலி ஒன்றும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

---

### கண்காணிப்பு சபைக்கூட்டம்

இராமநாதபுரம், ஞாயிறு

கிளிநொச்சி பொலிஸ்-பொதுமக்கள் கண்காணிப்புச்சபை பொதுக்கூட்டம், இம்மாதம் 15-ம் தேதி கிளிநொச்சி காரியாதிகாரி திரு. இ. போகநாதன் தலைமையில் நடைபெறும்.

### பதவி உயர்வு

இளைமாணன், ஞாயிறு

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. நா. துரைச்சாமி வடுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் வட்டாரப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இளைமாணனைச் சேர்ந்த இவர் இம்மாதம் 25-ந் திகதி தொடக்கம் சேவை செய்வார்!

### ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 14—10—68

(செய்திகள்: காலை 7-00, பகல், 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர் தயாரிப்பு—வானொலி அக்கா.

6-15 சங்கீத பாராயணம் 6-30 விளையாட்டு விமர்சனம், 6-45 பாவளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 விசேஷச்சக்கரம் இல.91, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதசுரம்.

வாகனங்களை

## அவசர காரியங்களுக்கு உபயோகிக்க முடியவில்லை
### கண்டி பொலிசார் திண்டாட்டம்

கண்டி, ஞாயிறு

கண்டி பொலிஸ் நிலையத்தில் செய்யப்படும் முக்கியமான சில புகார்களையிட்டு அவசர நடவடிக்கை எடுக்க முடியாமல் பொலிசார் திண்டாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்திண்டாட்டத்திற்குக் காரணம் இந்நிலையத்தில் வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே எனவும் தெரியவருகிறது.

அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற கொலை யொன்று சம்பந்தமாக சந்தேக நபர் ஒருவரை தேடி, கைதுசெய்வதற்காக பொலிசார் நடந்து செல்லுமாறு பணிக்கப்பட்டனர் என்றும் சந்தேக நபர் இருக்குமிடம் தெரிந்தபின்னர் அவ்விடம் சென்று அவரை கைது செய்வதற்கு வாகனமின்றி திண்டாடினர் என்றும் அறியப்படுகின்றது.

மத்திய மாகாணத்தின் தலைமை பொலிஸ் நிலையமான கண்டி பொலிஸ் நிலையத்திற்கு அளிக்கப்படும் பெற்றோல் பங்கீடு மாதத்தின் முதல் இரண்டு வாரத்திலேயே தீர்ந்துவிடுவதால், மாதத்தின் கடைசி இரண்டு வாரங்களிலும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டு வாகனங்களை உபயோகிக்க முடியாமல்போவதாயும், இது பற்றி கொழும்பு தலைமைப் பொலிஸ் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டும்இதுவரை எதுவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் ஓர் உயர்தர பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

---

### தண்ணீர் குழாய்

சாவகச்சேரி, ஞாயிறு

கடந்த பல வருடங்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் தண்ணீர் குழாய் இல்லாததால்பிள்ளைகள் அனுபவித்துவந்த கஷ்டம் கூடிய சீக்கிரம் தீர்க்கப்படும் என்று தெரிகிறது. இங்கு நீர்தொட்டி யுடன் பைப் அமைப்பதற்கான ஆக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விற்பனையாகிறது ! விற்பனையாகிறது ! !




மில்க்வைற் வாசனை சோப்

எல்லாவித சருமவியாதிகளையும் தீர்ப்பது

வாசனைமிக்க காபோலிக் சோப்.

மிகக் குறைந்த விலையில் ஒரு சிறந்த காபோலிக் சோப்.

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி வாய்ந்தது.

இதன் மேலுறைகளை சேகரியுங்கள்.

பரிசுத் திட்டத்தை விரைவில் எதிர்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்ட போட்டி

# சென். பற்றிக்ஸ் கோஷ்டி இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்றது

— நமது விளையாட்டு நிருபர் "தேவா" —

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் சென் பற்றிக் கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்கு மிடையில் பல ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், இரு பிரிவிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் நடைபெற்ற "பி" பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இடைவேளையின் போது சென். பற்றிக்ஸ் 1—0 கோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் மத்திய கல்லூரி முன்னணி வீரர்களின் விளையாட்டில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் கோல்கள்போட முடியவில்லை. இச் சந்தர்ப்பத்தில் பற்றிக்ஸ் கோஷ்டி மேலும் ஒரு கோலைப் போட்டது. இவ்விரு கோல்களையும் பெர்னாண்டோ, வி. ஆர். அன்ரனி முறையே போட்டனர். ஆட்ட முடிவில் சென். பற்றிக்ஸ் 2—0 கோல்களால் மத்திய கல்லூரியை தோற்கடித்தது. இப் போட்டிக்கு திரு. ஆர். மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

### "ஏ" பிரிவுப் போட்டி

"ஏ" பிரிவு போட்டி ஆரம்பமாகியவுடன், சென். பற்றிக்ஸ் முன்னணி வீரர் ஏ. வி. அன்ரன் வேகமாக ஒரு கோலைப் போட்டார். இதன் பின் இரு கோஷ்டியினரும் 15 நிமிடங்கள் வரை கடுமையாக மோதினர். இடைவேளைக்கு சற்று முன் பற்றிக்ஸ் முன்னணி வீரர் அன்ரன் மறுபடியும் ஒரு கோலை இலகுவாகப் போட்டார்.

இடைவேளையின் பின் ஆட்டம் மிக ரசிப்பாகக் காணப்பட்டது. மத்திய கல்லூரி முன்னணி வீரர்கள் கோல்கள் போட பல தடவைகள் முயற்சித்த போது அதை பற்றிக்ஸ் பின்னணி வீரர்கள் தடுத்து விட்டனர். சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களின் திறமையான விளையாட்டையும், வேகமான முன்னேற்றத்தையும் மத்திய கல்லூரி வீரர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆட்டம் முடிவடைய 15 நிமிடங்கள் இருக்கும் போது மத்திய கல்லூரி முன்னணி வீரர் தயாளசிங்கம் மிகசாதுரியமாக ஒரு கோலை போட்டார். இதன் பின் சென். பற்றிக்ஸ் கோஷ்டி மளமளவென கோல்களைப் போட்டது. அணியின் [காப்டன்] குறூஸ், ஜெயநாயகம் முறையே ஒவ்வொரு கோலைப் போட்டனர். மத்திய கல்லூரி காப்டன் சந்திரன், சென். பற்றிக்ஸ் பின்னணி வீரர் ராஜசேகர ஆகியோரின் விளையாட்டு ரசிப்பாகக் காணப்பட்டது. ஆட்ட முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மத்திய கல்லூரியை 5—1 கோல்களால் தோற்கடித்தது.

இப் போட்டிக்கு திரு; குமாரசாமி மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

### மெக்ஸிக்கோவில்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

விளையாட்டுக்களில் பங்கு பற்றும் நாடுகளின் விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் அழகாக அணிவகுத்து செல்ல மெக்ஸிக்கோ ஜனாதிபதி அவ் அணிவகுப்பை மரியாதையுடன் ஏற்றுக்கொண்டார்.

மெக்ஸிக்கோவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுகளை உலகெங்குமுள்ள 50 கோடி மக்கள் டெலிவிஷன் மூலம் பார்த்து மகிழ்வர்.

உதைபந்தாட்ட சங்க

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம், யாழ். மாநகரசபை ஊழியர் பொழுது போக்கு மண்டபத்தில், தலைவர் டாக்டர் துரைசிங்கத்தின் தலைமையில் நேற்றுக் கூடியது. கூட்ட ஆரம்பத்தில் உதவி தலைவர்களில் ஒருவரான திரு. பி. மகேந்திரன் கொண்டுவந்த ஓர் திருத்தப் பிரேரணையின் நிமித்தம், கூட்டம் இம்மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. (தே. நி)

'ஏ' பிரிவு போட்டி

### வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், திங்கள் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

'ஏ' பிரிவுப் போட்டியில் இருகல்லூரிகளும் மிகவும் திறமையாக விளையாடின. இடைவேளையின் போது ஸ்கந்தவரோதயாக் கோஷ்டி 1—0 கோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் வைத்தீஸ்வராக் கோஷ்டி மிகவும் துரிதமாக விளையாடி, இக்கோஷ்டியின் காப்டன் நகுலேஸ்வரன் ஒரு கோலைப் போட்டார். இப் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலை [1—1] முடிவுற்றது. இப் போட்டிக்கு திரு. இம்மானுவேல் மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவுப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக்கோஷ்டி வைத்தீஸ்வராக் கோஷ்டியை 4—1 கோல்களால் தோற்கடித்தது.

'சி' பிரிவுப் போட்டியிலும் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டியை 3—0 கோல்களால் வென்றது. (தே. நி)

### உதைபந்தாட்டப் போட்டிகள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு தெல்லிப்பழை மத்திய மகா வித்தியாலய 1-ம், 2-ம் பிரிவினருக்கும், இளவாலை என்றியரசர் கல்லூரி 1-ம், 2-ம் பிரிவினருக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 2 கோல்களைப் போட்டு என்றியரசர் கல்லூரி வெற்றி பெற்றனர்.

1-ம் பிரிவிற்கான ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் மோதி தலா இரண்டு கோல்களைப் போட்டன. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப் போட்டிகள் இளவாலை என்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றன.

### விளையாட்டு அரங்கு வேண்டும்

ஊர்காவற்றுறை, திங். ஊர்காவற்றுறையில் பொது விளையாட்டு அரங்கு ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டுக் கொள்வதென தீவுப் பகுதி விளையாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது.

கழிபுர , ஞாயிறு வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப்பாடசாலைகளின் பரிசோதகராகக் கடமையாற்றிய வித்தியாதரிசி திரு. எஸ். சபாபதி இம்மாதத்துடன் இளைப்பாறுகின்றார்.


## லங்காலோஹ

இலங்கைத் தயாரிப்பு உலோகப் பொருள்கள்

சிறந்த ரகம், நம்பிக்கை, நீடியகால பாவனைக்கு

லங்காலோஹ மண்வெட்டிகள்

அளவு 8"x10"—சில்லறை விலை ரூ. 8-25 ஒன்று

அளவு 7"x10"—சில்லறை விலை ரூ. 7-50 ஒன்று

யாழ்ப்பாண மோஸ்தர் மண்வெட்டி

உயர்ந்த உறுதிவாய்ந்த உலோகம்

நிறை 4 இறாத்தல்



சில்லறை விலை ஒன்றுக்கு

ரூ. 14-00

இலங்கை அரசாங்க உலோகப்பொருட் கூட்டுத்தாபனம்

242, ஹவலக் ரோட், கொழும்பு-5

போன்: 82191 - 82192 - 82704

## ரேக்*

நேரடிக் களை கொல்லி உபயோகித்து

## நெல் விளைவைப் பெருக்குங்கள்



ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை பின் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.



நேரடிக் கொல்லியான ரேக்கினையே உபயோகியுங்கள். நெல் விளைவு பெருகும்.

Monsanto

* மொன்சந்தோ கொம்பனியின் வர்த்தகக் குறி.

MC 2/67 AJNS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது தமிழ்மலர் பொருத்தமான துணைநூல்

## ஆசிரியர் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு கல்வித் திணைக்களம் பிரசுரித்த ஒன்பதாவது தமிழ் மலர் க. பொ. த. (சாதாரண) முதலாம் வருட வகுப்பிற்கு மிகப் பொருத்தமான துணை நூலென கொழும்பு வடபிரதேச பாடசாலை ஆசிரியர் சங்கம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நீர்கொழும்பு அல் ஹிலால் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடந்த இச்சங்கத்தின் கூட்டத்தில் சுமார் 250 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கல்வித்துறையிலே தமிழ் மொழி இன்று தனிப்பட்ட பாடமாக மட்டும் அமைந்திருக்கவில்லை. எல்லாப் பாடங்களுமே தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படுவதால் அது மூல பாடமாகவும் அறிவுத்துறைகள் அனைத்துக்கும் திறவுகோலாகவும் விளங்குகிறது எனவும் நவாலியூர் சோ. நடராசன் வெளியிட்ட தமிழ் நூல் முழுவதும் மாணவரின் தரத்திற்கேற்பவும், பாட விதானத்திற்கு அமையவும் எழுதப்பட்ட ஒரு துணை நூலாக தமிழ்மலர் விளங்குவதாகவும் இந்நூலின் மூலம் மாணவரிடையே புத்துணர்ச்சி ஏற்படுமென்றும் வித்துவான் எவ். எக்ஸ். நடராசா கூறினார்.

---

## யாழ்ப்பாணத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துவைத்தல். இரவு புங்குடுதீவில் பொதுக்கூட்டம். 18-ம் திகதி காலை 9 மணி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 10-30 மணி அளவெட்டி ஸ்ரீ லங்கா வித்தியாசாலை, மாலை 3 மணி மாதகல் இளைஞர் சங்க கட்டடம், 5-30 நாவற்குழி மகா வித்தியாலயம் பரிசளிப்பு விழா, இரவு வட்டுக்கோட்டையில் பொதுக் கூட்டம். 19-ம் திகதி காலை 7-30 மணி சங்கானையில் நாகலிங்கசுவாமி ஞானவார்த்த மண்டபத்துக்கு அத்திவாரக்கல் நாட்டிவிட்டு பலாலி விமான மூலம் கொழும்பு திரும்புவார்.

---

## மாவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை செய்தனர். இப்போது மாவிட்டபுரம் ஆலயப்பகுதியில் அமைதி நிலவுகிறது.

கோவில் சுவரில் மீதேறிக் குதித்து கோயில் மணியை அடித்துப் பரபரப்பேற்படுத்தியதாகக் கூறப்படும் இந்நபரை மாவிட்டபுரம்கிராம சேவையாளர்தான் பொலிசாரிடம் ஒப்படைத்தாராம். இவருடன் மாவிட்டபுரத்துக்கு வந்ததாகக் கூறப்படும் வேறு சிலர் அங்கிருந்து ஓடிவிட்டனராம்.

---

## புதிய பஸ்நிலையம்

கல்முனை, ஞாயிறு கல்முனையில் புதிய பஸ் நிலையம் ஒன்று திறவப்பட்டுள்ளது. பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான முறையில் இந்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

---

## இன்று இரங்கற் கூட்டம்

சுழிபுரம், திங்கள் காலஞ்சென்ற திரு. எம். செப்பிரகாசம் அவர்களின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு வழக்கம்பரை வாசிகசாலை மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு டாக்டர் என். ரி. சம்பந்தன் தலைமையில் இரங்கற்கூட்டம் நடைபெறும்.

---

## காந்தி ஜயந்தி விழா

உடுவில், ஞாயிறு இணுவில் பரமானந்த வாசிகசாலை நூல் நிலையத்தினர் காந்தி ஜயந்திவிழாவை வழமைபோல இம்முறையும் கொண்டாடினர். காந்திஜியின் உருவப்படம் தாங்கிய ஊர்வலமொன்றும் அதைத் தொடர்ந்து மேற்படி நிலையத்தில் ஜயந்தி விழாவும் கொண்டாடப்பட்டது.

---

## செனட்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாவுக்கு அகில இலங்கை காந்தி சேவாசங்கத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமைவகிப்பார்.

---

## கல்முனையில் கடும் வரட்சி

கல்முனை, ஞாயிறு கல்முனைப் பகுதியில் வரட்சிநிலை மாறவில்லை. மழைவரும் என எதிர்பார்த்த விவசாயிகள் ஏமாற்றமடைகின்றனர். தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர். மழைகாலநிலைபோல கொடும் வரட்சி எரித்து மழையை வரவழைக்க சேனைக் குடியிருப்பு கிராமவாசிகள் ஒழுங்குசெய்கின்றனர்.

## கொடுவாக் கத்தியால் வெட்டப்பட்டாராம்

### அபாய நிலையில் ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு மிருசுவிலைச் சேர்ந்த நடராசா என்பவர் கொடுவாக் கத்தியால் வெட்டப்பட்டு அபாயகரமான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்பு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுபற்றிய புலன் விசாரணையை சாவகச்சேரிப் பொலிசார் நடத்திவருகின்றனர். (ந நி)

---


# மாபெரும் இலக்கியப் போட்டி

'ஈழநாடு' அளிக்கிறது ரூ. 3,000

★ சிறு கதை ★ நாவல் ★ கவிதை ★ காவியம் ★ மாணவர் கட்டுரை

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 'ஈழநாடு' ஸ்தாபனம் பல்வேறு துறைகளிலும் போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்க முன்வந்துள்ளது. போட்டி விபரங்கள் வருமாறு'

## நாவல் பரிசு 1500 ரூபா

முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் நாவலுக்கு 1000 ரூபா பரிசு வழங்கப்படும். இரண்டாவது நாவலுக்கு 500 ரூபா பரிசளிக்கப்படும். 250 பூலஸ்காப் தாளுக்குக் குறையாமல் நாவல் அமையவேண்டும். தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதப்படவேண்டும்.

நாவல் சரித்திர அல்லது சமூகப் பின்னணியைக் கொண்டிருக்கலாம். ஆனால் இலங்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படல் வேண்டும்.

போட்டி முடிவு திகதி 31-12-68

## காவியத்திற்கு 750 ரூபா

காவியப் போட்டியிலும் எந்த வயதினரும், எந்த நாட்டிலும் வாழும் கவிஞர்கள் கலந்துகொள்ள முடியும். தலைசிறந்த ஐந்து கவிஞர்கள் போட்டிக்கு வரும் காவியங்களில் இரண்டைத்தெரிவு செய்வர். இலங்கை சூழலைப் பின்னணியாகக் கொண்டு காவியம் அமைக்கப்படவேண்டும். மிகச் சிறந்த காவியத்துக்கு 500 ரூபாயும், இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படும் காவியத்துக்கு 250 ரூபாயும் பரிசாக வழங்கப்படும். காவியம் 350 பாடல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

போட்டி முடிவு திகதி 31-12-1968.

## சிறுகதைப் போட்டி

இலங்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு சமூக வரலாற்றுச் சிறுகதைகள், சிறு கதைப்போட்டிக்கு அனுப்பலாம். ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர்கள் மூவரைக் கொண்ட ஒரு குழு பரிசுக்குரிய இரு சிறுகதைகளைத் தெரிவு செய்யும். முதல் பரிசுத் தொகை 200ரூபாவ், இரண்டாவது பரிசு100 ரூபா.

போட்டி முடிவு திகதி 15-11-1968.

## கவிதை

இலங்கைச் சூழலைக் கொண்டு ஆக்கப்படும் கவிதைகளையே இப்போட்டியில் கலந்து கொள்ளும் கவிஞர்கள் அனுப்பவேண்டும். ஈழத்தின் தலைசிறந்த மூன்று கவிஞர்களைக் கொண்ட ஒரு குழு சிறந்த இரு கவிதைகளைத் தெரிவு செய்யும். மிகச் சிறந்த கவிதைக்கு 150 ரூபாயும் அடுத்ததாகத் தெரிவுசெய்யப்படும் கவிதைக்கு 75 ரூபாயும் பரிசு வழங்கப்படும்.

போட்டி முடிவு திகதி 15-11-1968.

## மாணவர் கட்டுரை

அகில இலங்கை அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்படும். மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என போட்டிகள் இரு பிரிவாக அமையும். மேற்பிரிவுக்கான போட்டிக் கட்டுரைகள் 1,000 சொற்களுக்கு மேற்படாமலும், கீழ்ப்பிரிவுக்கான கட்டுரைகள் 700 சொற்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

## கட்டுரைக்கான தலைப்புகள்

மேற்பிரிவு: சாதியும் பத்திரிகையும்,
கீழ்ப்பிரிவு: காலத்தின் கண்ணாடி
போட்டி முடிவுத் திகதி: 15-11-68

போட்டிகளில் பங்குபற்றுவோர் இங்கு வெளியாகியிருக்கும் கூப்பனை நிரப்பி, தமது விஷயங்களுடன் அனுப்பிவைக்கவேண்டும். மாணவர்கள் பாடசாலை அதிபரால் கட்டுரை அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பப்படவேண்டும். கீழ்ப்பிரிவில் 18 வயதுக்குட்பட்ட மாணவர்களும் மேற்பிரிவில் 22 வயதுக்குட்பட்ட மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

### ஈழநாடு 10வது ஆண்டு விழாப் போட்டி

பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

போட்டியின் பெயர்: ____________________

பிரிவு: ____________________

வயது: ____________________

____________ திகதி

____________ கையொப்பம்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] கோவில் மேலவீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org